911

911
2-50.

"உழவர் நாடு"

மாதப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUN 1950
MADRAS

இருமுறை மைசூர் ராஜியத்தின் முதல் மந்திரியாக
இருப்பவரும் அகில இந்திய ரெட்டி மகாஜன சங்கத்தின்
தலைவராக தேர்ந்தெடுக்கப்போகும்
ஆனரபிள்
திரு. K. செங்கலவராய ரெட்டிகாரு அவர்கள்

வெளியீடுபவர் & ஆசிரியர்: N. S. அழகர்சாமி,
முத்துராமலிங்கபுரம்,
கல்லூரணி P.O

1950. விலை 2 அணா.

பதிப்பகம்.
ஸ்ரீ சத்தி பிரஸ், அருப்புக்கோட்டை.

★ "உழவர் நாடு" ★

மாதப் பத்திரிகை.

ஆசிரியர் N. S. அழகர்சாமி.

முத்துராமலிங்கபுரம், கல்லூரணி P. O.

உழவு 1	விகுர்தி வருடம் சித்திரைமீ	விளைவு 7

சங்கத்தார் செய்ய வேண்டிய தென்ன?

'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.' (குறள்)

'சங்கத்தார்' என்று நாம் குறிப்பிடுவது, கள்ளிக்குடி ரெட்டி மகாஜன சங்கத்தைச் சேர்ந்தவர்களையே யாகும். கல்வித் துறையில் நம்மவர்கள் மேம்பட்டவர்கள் என்று, அரசாங்கம் தனது கணக்கில் எழுதி வைத்துக் கொண்டாலும், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள நமது குல மக்கள், படிப்பு சம்பந்தப்பட்ட வரையில் மிகவும் பிற்போக்கு உடையவர்கள் என்பதை, உண்மையை உணர்ந்த எவரும் மறுக்கமாட்டார்கள்.

இந் நிலையை போக்கவேண்டுமானால், அனைத்திற்கும் அரசாங்கத்தையே நம்பிப் பயனில்லை என்று நினைத்த காரணத்தால் எழுச்சி மிக்க நம் குல மக்கள், எழாண்டுக்கு முன் ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார்கள். அதன் மூலமாக அறியாமையை அகற்றப்பார்த்தனர். நம் மக்கள் வசிக்கும் கிராமங்களிலுள்ள மூலை முடுக்குகளெல்லாம் மின்னல் வேகத்தில் பிரச்சாரம் நடத்தினர் அந்த வேகத்திலேயே அனைவருக்கும் பொதுவான வரியொன்று விதிக்கப்பட்டு, ஒரு சில கிராமங்களில் ஓரளவிற்கு வசூலிக்கவும் பட்டது.

சங்கம் முனைத்த மூன்றாண்டுக்குள் முடிந்து விடும் கள்ளிக்குடியில் ஓர் ஹைஸ்கூல்; என எண்ணினோம். எண்ணிய எண்ணம் முடிவடையவில்லை; ஏன்? எண்ணியவர் திண்ணியவராக இல்லாத காரணத்தால் இந் நிலையில் நம் ஒப்பற்ற தலைவர். திரு. A. K. A. இராமச்சந்திர ரெட்டியார் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். சங்கத்தின் நிதியைக் கவனித்தாலோ, ஹைஸ்கூல் கட்ட போதுமானதாக இல்லை. மேற்கொண்டு நிதியைத் திரட்டவோ கவனம் செலுத்தப்படவில்லை. கள்ளிக்குடி வட்டகையைச் சேர்ந்த முதலாளிமார்கள், தங்கள் நிதியில் ஓரளவிற்கு நன்கொடையாகக் கொடுக்க முன் வரும் போது நாமும் முனைந்து, எண்ணிய காரியத்தை முடிப்போம்,

அதற்கிடையில் நாமும் அவர்களும் செய்யவேண்டிய மிகவும் முக்கியமானதும், அவசரமானதுமான காரியம் ஒன்றுண்டு. அதுதான் திருப்பரங்குன்றத்திலிருக்கும் நமது மடங்களையும். (சுப்பலாபுரம், மண்டபசாலை - ரெட்டியபட்டி வகையறுவைச் சேர்ந்த மடத்தையும் சேர்த்து) மதுரை, கோரிப் பாளையத்திலுள்ள திருக்கண் கட்டிடத்தையும் ரிப்பேர் செய்து நல்ல நிலைமையில் வைத்து, திருவிழாக்காலங்களிலும் மற்ற காலங்களிலும் நமது மக்கள் தங்குவதற்கு போதுமான விஸ்தீரணத்தைக் கழித்து, மீதி இடங்களை வாடகைக்கு விட்டால் ஆண்டு ஒன்றுக்கு நான்கு ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும் என்பதில் சந்தேகமேயில்லை ஷை மடங்களுக்கு வாட்ச்மேன் லைட், முனிசிபல் வரி முதலியவைகளுக்கு மிக அதிகமாக செலவு செய்தாலும் ரூபாய் ஆயிரத்திற்கு மேல் போகாது. மீதியை நமது குல ஏழைப் பிள்ளைகளுக்கு, ஹாஸ்டல் வசதிக்கோ, ஸ்காலர் சிப்கோ எதுவேண்டுமானாலும் ஆண்டுதோறும் தவறாமல் செய்து வரலாம். பிரத்தியேகமாக வரி வசூலிக்கவேண்டியதில்லை.

சங்கத்தின் நிதியை, மிக மிக குறைந்த வட்டிக்கு பேங்கில் போட்டிருப்பதை விட 4 அல்லது 5 ஆயிரங்கள் செலவு செய்து நமது முன்னோர்கள் கட்டிய கட்டிடங்களை பழுது பார்த்து பாது

காப்பதுடன், அதன் மூலமாக கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, அறிவு வளர்ச்சியை அவனியில் பரப்ப ஏதுகரமாக இருக்குமென்பதில் ஐயமில்லை. ஆகையினுலே அடுத்துவரும் நிர் வாகஸ்தர்கள் கூட்டத்தில், இவ்விஷயத்தை யோசித்து ஒரு முடிவுக்கு வர வேண்டுகிறோம்.

வாழ்க நம் சங்கம்! மொழி!! நாடு!!!

அந்த எண்ணம் எழவில்லையா?

S. A. சாமி.

சென்ற ஐந்து ஆண்டுக்குள்ளாக மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களில் வசிக்கும் கெண்டிக்கோட்டை ரெட்டியார் வகுப்பைச் சேர்ந்த நமது ஜாதி மக்கள் திருப்பரங்குன்றம் மடத் திற்கு ஒரு தடவையாவது சென்று பார்த்திருப்பீர்கள். கவனித்து உற்று நோக்கி இருப்பீர்கள் அவ்விதம் கவனித்து உற்று நோக்கு வதற்கு என்ன இருக்கிறது, என்று கேட்க நீங்கள் துடி துடிக்கலாம்.

ஐந்தாண்டிற்கு முன் முருகனின் அருள் பெறுவதற்கு குன்றம் சென்ற நம் மக்கள், இரவில் நமது மடத்தில் தங்கும் சமயம், இருள் பெற்று இருந்தனர். அதை அகற்றியது, இன்று பட்டப்பகல் போல், இரவில் வெளிச்சம் தரும் அந்த மின்சார விளக்குகளே. இந்த மின்சார விளக்குகள் போட்டது யார்? என்பதையே உங்களை உற்று நோக்கச்சொன்னது. அவரை யார என்று கேட்கின்றீர்கள். அவர்தான் பெ. புதுப்பட்டி திரு. ரெங்கசாமி ரெட்டியார் அவர்கள் இவருடைய திருநாமம் மடத்தின் திருமதிலில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. நண்பர் திரு ரெங்கசாமி அவர்கள் ஓர் பெரிய பட்டாதாரியோ, லேவாதேவிக்காரரோ, முதலாளி என்ற அடைமொழியோ உடையவர் அல்ல. சாதாரண ஓர் சிறிய மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர் இப்பேர்ப்பட்ட

அன்பர், தனது சொந்தச் செலவில் ஷெடி மடத்திற்கு மின்சார விளக்குகள் நன்கொடையாக அளித்து, தனது பெயரை, என்றென்றும் நிலைத்து இருக்கும்படி செய்து, புகழ் பெற்றிருக்கின்றதை, பார்த்து பணக்காரர்கள், பக்திக்காரர்கள், படை பலம் மிகுந்தவர்கள், பட்டாடை பொத்திகள் பதவி வேட்டையாளர்கள் பாருக்கு உழைப்போர்கள் என்றுசொல்லிக்கொண்டிருப்பவர்கள் ஆகிய இன்னோரன்ன அன்பர்களுக்கு, அந்த எண்ணம் நமது தாய் மடத்திற்கு நன்கொடையாக ஏதாவது செய்து, தங்களின் பெயரும் மடத்தின் திருமதிலில் பொறிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் எழவில்லையா? என்பது தான் எனது ஏக்கமாக இருக்கின்றது. சரி இன்னும் ஏக் (ஒரு) வருஷம் இருந்து பார்ப்போம்.

★ நமது நன்றியும் பாராட்டும். ★

எனது நண்பரும், அருப்புக்கோட்டை முனிசிபல் எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியருமான திரு. K. ரெங்கசாமி அவர்கள் மதுரை-இராமநாதபுரம் ஜில்லா கூட்டுறவு பண்டகசாலையின், டைரக்டராக தேர்ந்தெடுக்கப்பெற்றமைக்குப் பாராட்டுகின்றோம்

முத்துராமலிங்கபுரம் போர்டு ஹையர் எலிமெண்டரி ஸ்கூலுக்கு, ரேடியோ ஒலிபெருக்கிக் கருவியை, நன்கொடையாக கொடுத்து உதவிய ஷெடியூர் பிரபல வியாபாரி திரு. தி. கு. ரெ நாராயண ரெட்டியார் அவர்களின் தர்ம சிந்தனையை பாராட்டுவதுடன், நமது அன்புமிகுந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நமது குலமக்கள் வசிக்கின்ற, ஒவ்வொரு கிராமத்திலும் திரு நாராயணன் போன்றோர்கள் கிராமத்திற்கு 20 அல்லது 30 பேர்கள், பொருள் துறையில் சேவை செய்ய முற்படவேண்டுமென்பது நமது நெடுநாளைய விருப்பமும் கூட. முயற்சிப்பீர்களாக.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 JUN 1950
MADRAS

இந்திய குடியரசு சட்டம்.

1946 டிசம்பர்மீ 9வ முதல் கூட்டம் கூடியது. இறுதியில் கூடிய 26—11—49வ முடிய மூன்று வருடங்கள் ஆயின. அரசியல் நகல்விதிகள் தயாரிக்க, பரிசீலிக்க டாக்டர் P. R. அம்பேத்கர் தலைமையில், பி. என். ராவ் ஆலோசனையில், எஸ். என். முக்கர்ஜி காரியதரிசியாயிருக்க, அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், கே. எம். முன்ஸி என். கோபால்சாமி அய்யங்கர், T. T. கிருஷ்ணமாச்சாரி, செய்யத் முகமது சாதுல்லா இவ்வறுவர்களையும் கொண்ட நகல் கமிட்டி தயாரித்து சமர்பித்த விதிகள் 395' ஷெட்யூல் 8. 7635 திருத்தங்களுக்கு நோட்டீஸ் வந்தது. ஆனால் 2473 திருத்தங்கள் தான் பிரேரிக்கப்பட்டன. கடைசி கவர்னர் ஜெனரலான ராஜாஜியால் பிரகடனப்பட்டது நமது குடி அரசு.

141 நாட்களில் திட்டங்கள் தயாரித்து, 114 நாட்களில் பரிசீலனை செய்து, 63லட்சம் பொருட் செலவில் உருவாகியுள்ள இந்திய குடியரசு சட்டத்தில், அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ், ஸ்விட்ஜர்லாந்து போன்ற நாடுகளின் சிறந்த அரசியல் பகுதிகள் இடம் பெற்றிருக்கின்றன. 26-1-50ல் திரு. ராஜேந்திர பிரசாத் இந்திய குடியரசின் முதல் ஜனாதிபதியாக, போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

'ஆராய்ச்சி மணி.'

வியாபாரத்தை விளம்பரம்

மூலம் விருத்திசெய்யுங்கள்.

கவிதை:

"சென்னை நகர் தமிழர்க்கே"

(P. சீனிச்சாமி)

1 பன்னெடு காலமாகப் பாரத அன்னையின்
பாத கமலங்களில் பரங்கியரால் பூட்டப்பட்ட
அடிமை விலங்குகளை தகர்த்த தமிழ்மக்கள்
ஆந்திரரின் சென்னைப் பூச்சாண்டிக் கஞ்சிடோம்.

2 பிரித்தாளும் சூழ்ச்சியைக் கண்டு மனம் வெதும்பி
பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்திடத் தியாகம் செய்த
திருப்பூர் குமரன், வ. உ. சிதம்பரம் தோன்றலான
தமிழர்கள் சென்னையை ஆந்திரர்க்கு விடமாட்டோம்.

3 பீரங்கி வாய்முன்பு பெருமிதமாய் மார்பு காட்டி
பிறந்த பொன்னாட்டின் சுதந்திரம் காத்திடவே
பிராணத் தியாகம் செய்த வீரத் தமிழ் மக்களில்
பிறப்புரிமை சென்னை நகரென்றே புரட்சி செய்வோம்.

4 அன்னியர் ஆட்சிதனை அறவே ஒழித்திடவே.
அண்ணல் காந்திஜி அரும்பெரும் தலைமையின்
வழிச்சென்று தேசப்பணிபுரிந்த தமிழ் நாட்டு
வடவேங்கடம்-குமரி எல்லை ஜெயமுரசடிப்போம்

5 மனிதருள் மாணிக்கம் ஜவஹர்லால்-பட்டேல்ஜி
மாண்புமிக்க காங்கிரஸ் ராஷ்டிரபதி பட்டாபி
மூவர் சிபார்சையும் மீறிச் சென்னை நகர்மீது
மோகங்கொள் ஆந்திரரின் வாதமதை முறியடிப்போம்.

6 தெய்வத் திருவள்ளுவர், புகழேந்தி-பாரதியார்
தமிழ்த்தென்றலாம் ஔவை, கம்பர் காலமுதல்
குமரியின் வடக்கெல்லையாய் விளங்கி நிற்கும்
கன்னித் தமிழ் மணக்கும் சென்னை தமிழர்க்கே.

7

எக்கட்சியில் சேர்ந்தவர்கள்.?

(எவன் எழுதினால் என்ன)

உழவர்நாடு ஆசிரியரவர்களே! நமஸ்காரம், நேரிய முறையில், நெடுநாட்களாக கேட்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்த கேள்வியைக் கேட்கிறேன். தயவுசெய்து தங்கள் பத்திரிகை மூலம் பதிலைத்தாருங்கள்.

கேள்வி:

தாங்களும், சுக்கிலநத்தம் ஸ்ரீ O. N. R. N. கந்தசாமி ரெட்டியாரும், [இப்பொழுது அருப்புக்கோட்டையில் ஜவுளிக்கடை வைத்திருக்கிறார்] ஸ்ரீ K. ரெங்கசாமி உபாத்தியாயரும் எந்த அரசியல் கட்சியில் சேர்ந்தவர்கள்? பல சந்தர்ப்பங்களில் பலவிதமாக தோற்றம் செய்கின்றீர்களே காரணம் என்ன?

பதில்:

கேள்விகேட்ட அன்பர் அவர்களுக்கு எனது அன்பான வணக்கம், இக் கேள்வியைக் கேட்க நெடுநாட்களாக காத்திருக்க வேண்டியது இல்லை. என்றைக்கு கேள்விகேட்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதோ அன்றே கேட்டிருக்கலாம் பரவாயில்லை

அன்பர் அவர்களே! யான் கடந்த 12 ஆண்டுகளாக இராமநாதபுரம் ஜில்லா போர்டு ஆதிக்கத்திற்குட்பட்ட ஓர் பள்ளியில் ஆசிரியராக வேலைபார்த்து வருகின்றேன். என்பது தங்களுக்குத் தெரிந்திருக்குமென்று நம்புகின்றேன். ஆசிரியராக வேலைபார்க்கும் எவரும் எந்த அரசியல் கட்சியிலும் அங்கம் வகிக்கக்கூடாது என்பது அரசாங்கத்தின் ஆணை. அப்படியிருக்க, எந்தக் கட்சியிலும் சேருவதற்கும் அடியேனுக்கு அருகதை கிடையாது. ஆனால் காந்தீயத்தின் பேரில் அவ்வப்போது ஒருசில நன்கொடைகள் காங்கிரஸ் அன்பர்கள் எங்களூர் வந்து வசூலிக்கும்போது என்னால் இயன்ற ஒத்தாசை புரிந்திருக்கின்றேன். அவ்வளவேதான்,

அரசியல் கட்சிகள் இருக்கும் ஊரில் வேலை பார்க்கும் ஆசிரியர் ஒருவர் பல அரசியல் பற்றி தெரிந்திருக்கவேண்டிய அவசியம் ஏற்படும். அதைப்பற்றி பேசியும் இருக்கலாம். பேசும்பொழுது பார்த்த உங்களுக்கு பலவித தோற்றமாக இருக்கலாம். ஆனல் ஆசிரியர்தொழிலில் இருக்கும் வரைக்கும்எந்த அரசியல் கட்சியையும் உறுதியாக என் சம்பந்தப்பட்டமட்டில் பின்பற்ற முடியாது எந்தக் கட்சியார் அரசியலை நடத்துகின்ருர்களோ அந்தக் கட்சியைத்தான் பின்பற்ற முடியும் என்பதும், அதுதான் முறையுங் கூட என்பதும் மிகத் தெளிவு. எனது நண்பர்களான கந்தசாமி ரெங்கசாமியின் அரசியல் கொள்கைகளை அவர்களிடம் நேரிலோ கடிதமூலமோ கேட்டு தெரிந்துகொள்ளும்படி வேண்டுகின்றேன். வணக்கம்.

ரெட்டிமகாஜன சங்க நிர்வாககமிட்டிக் கூட்டம்

திருப்பரங்குன்றம்.

கள்ளிகுடி ரெட்டி மகாஜன சங்கத்தின் நிர்வாக கமிட்டி கூட்டம் தலைவர் திரு S, S சங்கம ரெட்டியார் அவர்கள் தலைமையில் 16—4—50உ பிற்பகல் 2½ மணிக்கு கூடிற்று. இரவு 9½-மணி வரை கூட்டம் நடந்தது. சங்கத்தின் எதிர்கால வேலை திட்டத்தைப்பற்றி சர்ச்சை செய்யப்பட்டது.

ஜெனரல்பாடி கூட்டத்தை ஜூன்மீ 1-அல்லது 2வது வாரத்தில் கூட்டி நிர்வாகஸ்தர்கள் தேர்தல் நடத்துவதென்றும் 49–50 ஹூ ஜெனரல்பாடி அங்கத்தினர்கள்தான் தேர்தலில் ஓட்டளிக்க உரிமையுடையவர்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டது. கமிட்டி கூட்டத்திற்கு 11 அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தனர்.

இவ் வாண்டில் 21 மாணவ மாணவிகளுக்கு சங்கத்தின் நிதியிலிருந்து ஸ்காலர் ஷிப் கொடுக்கப்பட்டிருக்கின்றதை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ராஜகுல கம்பள மஹாஜனக் கூட்டம்

16—4—50உ ஞாயிற்றுக்கிழமை பகல் 12-30மணிக்கு திருப்பரங்குன்றம் நாயக்கர் சபாமண்டபத்தில் விருதுநகர் திரு. கோபால்சாமி நாயுடு அவர்களின் தலைமையில் தமிழ்நாடு ராஜகம்பள குல மகாஜனக் கூட்டம் நடைபெற்றது,

தமிழ்நாட்டு குல பிரமுகர்கள் அநேகர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். சங்க அமைப்பாளர் திரு. S குருபாதம் அவர்கள் யாவரையும் வரவேற்றுப் பேசினார். சமூக முன்னேற்றங் கருதி ஆசிரியர் திரு. P. ராமசாமி, கோவிந்தராஜ். சீனி, குருசாமி நாயக்கர் அக்னிதத், T. K நாவலர் முதலியவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள். அவ்வமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

1 தமிழ்நாடு ராஜகுல கம்பள மகாநாட்டை மே மாதம் இறுதிக்குள் திருப்பரங்குன்றத்தில் நடத்துவது.

2 மாகாண, ஜில்லா, சங்கங்களை அமைப்பது. சட்டதிட்டங்கள் வகுப்பது.

3 சுதந்திர இந்தியாவில் முதன் முதலாக நடைபெறப்போகும் மகாநாட்டிற்கு திரு. P. S. குமாரசாமி ராஜா, திரு. O P. ராமசாமி ரெட்டியார், திரு காமராஜ் திரு C. P. சுப்பையா திரு. S ராமசாமி நாயுடு, திருவாளர்கள் ராஜாராம் நாயுடு, உடையப்பா, N. R. தியாகராஜன், உழவர்நாடு ஆசிரியர் N. S. அழகர்சாமி, T. K. நாவலர் முதலியவர்களை அழைப்பது.

4 மகாநாட்டின் காரியாலயம் திருப்பரங்குன்றம் திரு. T. K. நாவலர் அவர்கள் இல்லத்தில் இருக்கும் மகாநாட்டின் பொது செயலாளர் திரு. P. ராமசாமி அவர்கள் மகாநாட்டின் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவார். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

அமிர்த வல்லி.

—அண்ணா—

அத்தியாயம் 1.

செல்வநாயக முதலியார் 1942ம் ஆண்டு முதல் 1943ம் ஆண்டு முடிய உலகத்துக்கே ஒரு பெரிய சோதனை காலம் போலும்! அப்போது இரண்டாவது உலகமகா யுத்தம் உச்ச நிலையை அடைந்திருந்தது, எங்கும் ஒரே அமர்க்களம், ஆரவாரம், பரபரப்பு உலகமே சதிவேலையில் ஈடுபட்டது அப்போது சதி செய்வது சட்டத்திற்கு விரோதம் அதற்குத் தண்டனை. தண்டனை விதிக்க தனி உத்தியோகஸ்தர்கள் ஆனால் உலகமே சதித்திட்டத்தில் ஈடுபட்டால் அதற்குத் தண்டனை தர வேறு எதற்கும் அதிகாரம் இல்லையே! ஆதலால் தான் அது அப்பேர்ப்பட்ட சதித்திட்டத்தில் இறங்கியது. உலகத்துத்துக்கு நீதி வழங்க வேறு உலகம் வேண்டும் அந்த உலகத்திற்கு நாம் எங்கு செல்வது, வானுலகம், கீழுலகம் எல்லாம் வெறும் கற்பனையில் தானே. உண்மையாக அப்படியிருந்தால் தானே உலம் சதி செய்வதற்கு நீதி கிடைத்திருக்கும் வெறும் கற்பனையாக இருக்கும் போது...............

ஒருபுறம் ஐரோப்பாவையே ஆட்டிக்கொண்டிருந்தார் ஜெர்மனி சர்வாதிகாரியான ஹிட்லர். ஐரோப்பாவே "குரங்காட்டியிடம் அகப்பட்ட குரங்கின் கதியை" அடைந்தது சரணகதியடை என்றால் அதற்கு உடனே பணிவு, ஒத்துழை 'என்றால் ஆகட்டும் என்ற பதில் போரில் இறங்காதே என்றால் மறுபேச்சில்லை இப்படியாக ஐரோப்பா ஹிட்லரின் கையில் தவித்துக்கொண்டிருந்தது, ஆப்பிரிக்காவில் தன் அதிகாரத்தைத் செலுத்திக்கொண்டிருந்தார முசோலினி பகிபிக், இந்துமகா சமுத்திரத்தில் குட்டிச் சாத்தான் வேலையை ஆரம்பித்தது ஜப்பான், மாடமாளிகைகளும்,

கூட கோபுரங்களும் மண் மேடாகின. ஒருபுறம் ஜப்பானியர்களின் நாசவேலை. மறுபுறம் பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யர்களின் சதிவேலை. ஒருபுறம் புதிய கருவிகளைக் கண்டுபிடித்து நாசவேலையை ஆரம்பித்தால் மறுபுறம் நாசவேலையைத் தடுக்க வேறு கருவிகள் கண்டு பிடிக்கும் விஞ்ஞானிகளின் ஆராச்சிக்கூடங்கள் இவ்விதமாக யுத்தம் உச்ச நிலையை அடைந்து விட்டது. பர்மாவில் ஜப்பானியர் குண்டு மழையைப் பொழிந்தனர்! மேகத்தின் ஊடே செல்லும் ஆகாய விமானத்தின் உறுமல் சப்தம் ஒருபுறம். காடு மலைகளையும் மேடு பள்ளங்களையும் கருதாமல் எதிரிகளை வெல்லும் ஒரே நோக்கத்துடன் செல்லும் பீரங்கிகளின் அண்டம் அதிரும் சப்தம் மறுபுறம். குண்டு மழைக்கும், பீரங்கிகளின் வெடிக்கும் இரையாகிய பிணக்குவியல். அதே சமயத்தில் ஆபத்திலிருந்து தப்பக் குழிகளும் கிடங்குகளும் எங்கும் பாவிக்கிடந்தன. "சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவுவது போல" குழிகளிலிருந்தும், கிடங்குகளிலிருந்தும் தப்பிய உயிர்களுக்கு எண்ணிக்கையில்லை இப்படித் தப்பித்து வந்தவர்கள் பட்டியலில் நானும் என் மகனும் சேர்ந்துகொண்டோம். ஆனால் என் மகள் அஞ்சலையும், மனைவி ராஜத்தின் கதியும் என்ன ஆயிற்றோ இன்னும் எங்களுக்குத் தெரியவில்லை! ஒருவேளை எங்களைப் போல் தப்பிச்சென்று வேறு எங்காவது அனாதைகளாகத் திரிகின்றார்களோ! அல்லது ஜப்பானியர்களின் கையில்பிடிபட்டு கைதிகளாகி விட்டார்களோ! அல்லது பீரங்கி, ஆகாய விமானம் என்ற யமதர்மனின் குண்டு என்ற பாசக்கயிற்றுக்கு இரையாகி விட்டார்களோ தெரியவில்லை.

யுத்தம் ஆரம்பித்த ஓராண்டுக்குள் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்துவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் எனக்குச் சொந்தமான நிலம்புலன்களையும், வீடு வாசல்களையும் விற்றுச் சுமார் ஐந்து லக்ஷம் ரூபாயை ரொக்கமாக வைத்துக்கொண்டு பின்னும் கொஞ்ச காலம் அங்கு தங்கியிருந்தேன். 1943ம் ஆண்டில் யுத்தம் உச்ச நிலையை அடையவே இனியும் இங்கு இருப்பதில் பயன் இல்லை என்று தாய்நாடு திரும்ப மூட்டை கட்டிவிட்டோம். அன்ன ஆகாரமின்றி ஒரு வாரம் கால்

நடையாக நடந்தே வந்தோம். இந்தச் சமயத்தில் தான் என் மகளையும், மனைவியையும் இழந்து விட்டோம். தாயையும் தமக்கையையும் இழந்த என் மகனுடன் கால்நடையாக ரங்கூன் வந்து சேர்ந்தேன். ரங்கூனிலிருந்து சென்னைக்குக் கப்பலேற ஒரு வாரம் காத்திருந்து கப்பல் வந்ததும் முதலாகப் பதிவு செய்து கொண்டு சென்னைக்குக் கப்பலேறி விட்டோம். கடலில் ஒருவாரம் பிரயாணம் செய்யவேண்டியதிருக்கிறது எங்கள் உயிரைக் கையில் பிடித்த வண்ணமாகவே ஒரு வாரம் கப்பலில் பிரயாணம் செய்தோம். ஒருவாரம் கழித்து காலை ஆறுமணிக்கு ஆதவனைக் கும்பிட்டுக்கொண்டே கப்பலை விட்டிறங்கினேம் படகுக்கு. பின்னும் பயம் விட்டபாடில்லை. கடற்கரையை அடைந்த பிறகுதான் ஒருவாறு நிலைமையை சமாளித்துக் கொண்டேன். சென்னையில் பீச்ரோடுக்கு பக்கத்தில் ஒரு ரூம் வாடகைக்கு எடுத்துக்கொண்டு அங்கு தங்கியிருந்தோம். எங்கள் துரதிர்ஷ்டம் பர்மாவுடன் விடவில்லை. சென்னையிலும் ஜப்பானியர் குண்டுபோட வருவதாக வதந்தி பரவியது. என்னசெய்வதென்றே தெரியவில்லை.

பர்மாவில் நாங்கள் இருக்கும்போது என் பெற்றோர்கள் அடிக்கடி சொல்வதுண்டு சோழ நாட்டில் மருதூர் என்ற கிராமத்தில் என் அம்மாவுடன் பிறந்த மாமாவின் சிறிய தகப்பனார் பேரன் இருக்கிறார் என்று சோழ நாடு நல்ல நீர்வளமும், நிலவளமும் பொருந்தியது என்று எனக்கு முன்பே தெரியுமாதலாலும், எனக்கு நெடுநாட்களாக நஞ்சை வாங்கி விவசாயம் பார்க்கவேண்டுமென்ற ஆவல் இருந்ததாலும், இனம் இனத்தோடு சேர்ந்தால் நன்றாக இருக்கும் என்று மருதூர் வந்து சேர்ந்துவிட்டேன் என் மகனுடன், என் மைத்துனர் கேசவ முதலியார் உதவியால் அவருடைய நஞ்சையை அடுத்து நாற்பது ஏக்கர் நஞ்சையும், ஒரு நல்ல காரை வீடும் வாங்கினேன். வெறும் விவசாயத்தை மட்டும் கவனித்தால் போதாதென்று என் மைத்துனரையும் கூட்டாக சேர்த்துக்கொண்டு ஒரு ஜவுளிக்கடையும், ஒரு ஷாப்புக்கடையும் ஆரம்பித்தேன். அப்பொழுது யுத்தம் மும்முரமாக நடந்துகொண்டிருந்ததால், அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், உள் நாட்

டுக்கு இறக்குமதி செய்யவும் முடியவில்லை. உள் நாட்டிலுள்ள பொருள்களின் விலை விஷம்போல் ஏறிவிட்டது, அதிலும் ஜவுளிக்கும், இரும்புச் சாமான்களுக்கும் விலை ஒன்றுக்கு ஒன்பதாகிவிட்டது. ஆகவே எங்கள் முதலும் ஒன்றுக்கு ஒன்பதாகக் குவிந்துவிட்டது. பணம் பத்தும் செய்யுமல்லவா. தெரியாமலா பணம் பாதாளம் மட்டும், ஈட்டி எட்ட மட்டும் பாயும் என்று சொல்லுகிறார்கள், பணம் இல்லாதவன் பிணந்தானே இந்த உலகில். பணத்தையே பிரமாதமாகக் கொண்டு இவ் வுலகமே இயங்குவதால்தான் பணத்திற்கு அத்தனை மதிப்பும் ஏற்பட்டிருக்கின்றது. நாங்கள் மட்டுமென்ன அதற்கு விதிவிலக்காகவா ஆகிவிடுவோம். பணம் எவ்வாறு வளர்பிறைபோல் வளர்ந்ததோ அதேபோல் புகழும் வளரத் தலைப்பட்டது. நானும் என் மைத்துனரும்தான் அவ்வூர் பெரியதனக்காரர்கள். நாங்கள் இட்டதுதான் சட்டம் அதற்கு வேரு யாரும் மறுப்புக்கூற முடியாது. எங்கள் விரல் ஆட்டத்திலே இருந்தது அவ் வூரின் இயக்கம், அவ்வூரின் முக்கடவுளும் நாங்கள்தான் ஆக்கவும், அழிக்கவும், காக்கவும் எங்களால் முடிந்தது அவ்வூரிலே இப்படியாக பேரும் புகழும் படைத்து பிரபுக்கள்போல் வாழ்ந்துவரலானோம், (தொடரும்)

கைம்மையா யிருப்பது நீதியா?

(S. S. பாலகிருஷ்ணன்—மலைப்பட்டி.)

'கைம்மை' என்னும் தலைப்பிடும்போதே யான் பிறந்த சமூகத்தின் மீது நாட்டஞ் செல்கிறது. கைம்மை நிலை பெண்ணுலகிற்கும் ஆணுலகிற்கும் பொதுவானது. அந் நிலை வாழ்வில் இருபாலருள் எவர்க்கேனும் ஒருவர்க்கு ஏற்படாமல் போகாது. நம் சமூகத்தில் ஆண் கைம்மைக்கு (விதவைக்கு) கவலை இல்லை; துயரில்லை; துன்பமில்லை. மனைவி இறந்த ஒரு ஆண் கைம்மை மறும

ணம் செய்து இன்புற்றிருக்கலாமாம். நாயகன் இறந்த இளம் பெண் கைம்மை; மறுமணம் செய்யக்கூடாதாம். அவள் சாகும் வரைக்கும் கைம்மையாகவே இருந்து இயற்கை உணர்வை அடக்கி துயருறவேண்டியதா? அவள் எதிரில் வரக்கூடாதாம். கூட்டங்களில் போகக்கூடாதாம் நல் வினைகளில் தலைகாட்டக்கூடாதாம். உடையையும் உணவையும் சுருக்கல்வேண்டுமாம். அப்பெண் மூதேவியாய்விட்டாளாம் கைம்மை எய்திய ஆண் மகனோ எல்லாவற்றிலுங் கலந்துகொள்ளலாம். அவன் தொண்டு கிழவனயினும் பதினறு வயது கட்டழகியை மணஞ்செய்து கொள்ளலாம். என்ன வேற்றுமை. இவ் வேற்றுமை இயற்கையில் உள்ளதா? கடவுள் கண்டதா? இஃது இரக்கமிலா வன்கணளர் இடைக்காலத்தில் விதித்த கொடுமை! கொடுமை!

பெண் மகள் கைம்மை எய்தியதும் அவள்பாலுள்ள இயற்கை உணர்வு ஓடி விடுகிறதோ? உயிர்போய் விடுகிறதோ? கடவுள் மறைந்து விடுகிறரோ? படைப்பில் என்ன குறைவு ஏற்படுகிறது? விதிவசத்தால் ஆண் மகன் இறந்தால் பெண்மகளுக்கு இவ்வளவு தண்டனையா? கைம்மை எய்திய பெண் இக் கடும் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என ஏட்டில் எழுதிய சண்டாளன் யார்? அவன் பெண்களுடன் பிறக்கவில்லையா? பெண் தாய்மை என கருதி இருக்கமாட்டானே? பழைய புராண மதம்பிடித்தோரே இப் பாரினில் பெண்மை பழிப்பவர்கள் பழைய புராணங்கள் பகரும் கருத்தையும் பகுத்தறிவோடு பார்ப்பதில்லை. மன்றுதனில் நடம் ஆடும் பரமனும் மங்கையைத் தன்னொரு பங்குகொண்டான். கொன்றைச் சடைத்தலை தாங்கினன். பாற்கடல் மேவிய கார்க் கடல் வண்ணன் தன் பத்தினியை மார்பில் வைத்தான், நாற்கடற் பூப்படை நான்முகன் தேவியை நாவில் இருத்தினன், வள்ளியை அள்ளியே பன்னிருகையவன் மாமயில் ஏறினன். ஆக்கல், அளித்தல், அழித்தல் உடை இறையான அயனரி, அரனும் நாக்கினும் மார்பினும் மேனி தலையினும் நங்கையரைச் சுமந்தெய்த் திருக்க, எங்ஙனம் பெண்மை இழிவாகும். காதலுடன் கூடி ஆண்களோடு பெண்கள் கருத்தொன்றி இல்லறம் கைக்கொண்ட

பெண்மைக்கு இக்கொடுமையை இழைக்க ஆண்மகன் இனியும் சம்மதிப்பானுனல், மீளா நரகத்தில் இடர்படுவான்.

நமது சமூகத்தில் இலட்சக்கணக்கான சிறு குழந்தைகள் கைம்பெண்களாயிருக்கிறார்கள். அவர்கள் கதி என்ன? திருமணம் இன்னதென்றுணரா முன்னர் ஏன் சிறுமியரை திருமணஞ் செய்து கொடுத்தல் வேண்டும்? கைம்மை எய்த நேர்ந்தால் அவரை ஏன் கூட்டில் அடைத்து வருத்தல் வேண்டும்? அவர் வழுக்கி வீழ்வரேல் அவரை அடிப்பது, ஊரை விட்டு ஓட்டுவது சமயம் நேர்ந்தால் கொல்வது என்ன பாவம்! இப்பாவங்களை நிகழ்த்தி வரும் சமூகத்திற்கு உய்வுண்டோ? உரிமையுண்டோ? நாயகனுடன் ஒருபொழுதேனும் கூடி இன்பம் நுகராத பெண்மகள், கைம்மை நிலை எய்தினுல் மீண்டும் மணஞ்செய்து கொள்ளலாகாதா? மணம் என்பது யாது? பக்தரா? கோயிலா? மந்திரமா? ஒருத்தி ஒருவனுடன் கூடி இன்பம் நுகரும் நாளே திருமணம் முடிந்த நாளாகும். இளமை மணத்தையும் விலக்காது மறுமணத்தையும தடுப்பது அறமாகாது. கைம்மை எய்திய பெண் மக்கள் மறுமணஞ் செய்ய சம்மதியாவிட்டால் அவரை கட்டாயப் படுத்தவேண்டாம். விரும்பினுல் தடை இருக்ககூடாது. மறுமணம் செய்து கொள்ளாது விபசாரம் செய்து கெட்டழிவதும் கருச் சிதைக்கலும் நடக்கலாம போலும்! இங்கே 'கடவுள்' பாவம் கர்மம் ஒன்றுமில்லை போலும்! வெளிப்படையாக ஒருவனை மறுமணஞ் செய்து கொள்வது மட்டும் பாவம் போலும்! என்ன அறியாமை! இயற்கைக்கு மாறுபட்ட கண்மூடி வழக்கமும் கோழமையும் நாத்திகத்தின் பாற்பட்டனவாமென்க.

கர்மத்தின் மீது சிறிது கருத்துச் செலுத்துவோம். கர்மம் உண்டு; இல்லை என்று சொல்லவில்லை. தெருவில் போகும் ஒருவன் இடறி விழுந்து கால் முறிகிறது. அதுகண்டு கருமம் என்று வாளாகிடப்பது அறிவுடையாமோ? உலகம் அங்ஙனம் வாளாகிடக்கிறதா? உடனே அக்காலுக்கு தக்க சிகிச்சை செய்ய மக்கள் புறப்படுகிறார்கள். அறியாமையால் கர்மம் இயல்பாக

நிகழும் அதற்கு கழுவாயும் இயற்கையிலிருக்கிறது குழந்தை கர்மத்தின்படி கைம்மை எய்தியிருக்கலாம். அதற்குக் கழுவாய் என்னை? உற்ற வயதில் அது தன இயற்கை வேட்கையைத் தணிக்க மணஞ்செய்து கொள்வதாகும் கர்மத்தின் பேராலும் கடவுள் பேராலும் நமது நாட்டில் பல கொடுமைகள் நிகழ்த்தப் படுகின்றன. அவைகளுள் ஒன்று இளங் கைம்பெண்களை துன் புறுத்துவது நீண்ட நாள் வழக்கமாய் இருந்த அநேக கொடுமை களை போக்க முன்வருவதில் சிலர் பயப்படுகின்றனர். காரணம் என்னை? அக்கம் பக்கத்துக் கூக்குரல் சாதிப் பழக்கம். கைம் பெண்கள் துயர்களைய நாட்டிற் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஊக்கம் பிறத்தல் வேண்டும். ஆங்காங்குள்ள வாலிபர்கள் ஒன்றி ரண்டு பிரயாசைப்பட்டு துணிந்து மறுமணஞ் செய்து முடித்து விட்டால் பிறகு சகஜமாய்விடும். நம் சமூகத்தில் விவாக ரத்து செய்து இரண்டாந்தாரமாக பெண் மறுமணம் செய்து கொண்டார் கள். அது தற்சமயம் சகஜயாகி வருகிறது. சர்க்காரில் சட்டமும் வந்துவிட்டது. அதைப்போன்று இதையும் செய்து நம் சமூகம் பிற சமூகத்தைவிட முன்னேற உதவிசெய்ய முன்வாருங்கள். எதிர்ப்பு சக்திகளைக்கண்டு அஞ்சவேண்டியதில்லை "மாதர் இழிந் தவர் என்றறிவின்றியே வழுத்தும் புன்மையோரை கண்ணும் கருணையும் கொண்டமனத்தினர் காணுவரோ அந்தோ பாழ் நிலையை" (சுத்தானந்த பாரதியார்)

பெண்மை வாழ்க. தாய்மை வாழ்க. கைம்மை மறும்ணம் ஓங்குக. பெண்ணின் துயர் தீர்ப்பது ஆண் மகன் கடமை! கடமை!!

Regd No. M. 5478

"உழவர் நாடு"

(மாதப் பத்திரிகை.)

வருஷ சந்தா விகிதம்.

ராஜ போஷகர்	ரூ	100
போஷகர்	ரூ	50
விசேஷ ஆதரவாளர்	ரூ	25
ஆதரவாளர்	ரூ	10
ஸ்பெஷல் சந்தா	ரூ	5
சாதாரணச் சந்தா	ரூ	2
தனி இதழ்.		0—2—0

"வியாபாரத்திற்கழகு விளம்பரப்படுத்துதல்"

விளம்பர விகிதம்.

அட்டை வெளிப்புறம்	ரூ	50
,, உட்புறம்	ரூ	30
ஒரு பக்கம்	ரூ	25
[illegible] பக்கம்	ரூ	15

குறித்த விளம்பரத்திற்கு எழுதியறிக.

மாதிரிப் பிரதிக்கு 3 அணா ஸ்டாம்பு அனுப்புக.

'உழவர் நாடு' காரியாலயம்,
முத்துராமலிங்கபுரம்,
கள்ளிராணி P. O. (Via) அருப்புக்கோட்டை.

ஸ்ரீ சக்தி பிரஸ், அருப்புக்கோட்டை:—50.